உடைந்த உள்ளங்களுக்கு

# இயேசுவின் சமாதானம்

வருடம் 12 மாதம் 3



## இயேசுவுக்காக காத்திருங்கள்

செப்டம்பர் 2013

ஏ.எஸ்.வி. ராபின்

# இயேசுவின் சமாதானம்

**அனைவருக்கும் சுவிசேஷம்**



இயேசுவை
அறியாதவர்களுக்கு,
இயேசுவின்
சமாதானம்
பத்திரிக்கை கொடுத்து,
இயேசுவைப் பற்றி,
ஏ.எஸ்.வி. ராபின்
அறிவித்த போது.
இடம் :
உக்கடம், கோவை


**இயேசுவின் சமாதானம் பரவசப் பாடல்கள் – பாகம் 2**

## என் இயேசு..

கர்த்தர் இயேசுவின் கிருபையால் நவீன இசையில்
உருவாகிக் கொண்டிருக்கும்.
உள்ளத்தை இயேசுவிடம் திருப்பும். இனிமையான
ஆடியோ சிடி. விடியோ சிடி 2013 ல் வெளிவர
ஜெபித்துக்கொள்ளுங்கள்.

பாடல். ராகம் & பாடுபவர்கள்
**ராஜ்லின்ட் ராபின்**
**ஏ.எஸ்.வி. ராபின்**

( இசை : ஜி.எம். ஞானகுமார், டிவைன் மெலடிஸ் )








இயேசுவின் சமாதானம்
பரவச நேரம்

தமிழன் டி.வி.யில்

செப்டம்பர் 9 23 திங்கள்

ஒவ்வொரு 2வது, 4வது திங்கட்கிழமைகளிலும்

காலை 7.15

இமயம் IMAYAM டி.வி.யில்

ஒவ்வொரு 2வது, 4வது செவ்வாய்க்கிழமைகளிலும்

செப்டம்பர் 10 24 செவ்வாய்



தேவ செய்தி & ஜெபம் ஏ.எஸ்.வி.ராபின் & பொற்செல்வி ராபின்

# அன்புக் கடிதம்...

சிங்ககுட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்,
கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது.
(சங் 34:10)



**என் அன்பு அண்ணன், தம்பி, அக்கா, தங்கைகளே!**

**மகிமையின் ராஜா இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரால் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன்.**

உங்களுக்காக உங்கள் குடும்பத்திற்காக, உலக மக்களின் ஆசீர்வாதத்திற்காக தினமும் நாங்களும், இயேசுவின் சமாதானம் ஜெபக்குழுவினரும் அதிக பாரத்தோடு ஜெபித்து வருகிறோம்.

இந்தியாவில், தமிழ்நாட்டில் மதுவினால் சீரழியும் குடும்பங்கள் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. தமிழக அரசு, டாஸ்மாக் என்ற மதுக்கடைகளின் மூலம் அதிக வருமானம் வருவதால் இதை நடத்துகிறது. தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் கிறிஸ்தவ பள்ளியில் படித்ததினால் ஆண்டவர் இயேசு அவருடைய உள்ளத்தில் பேசும்படி பாரத்தோடு ஜெபிப்போம். கர்த்தர் பேசி, பூரண மதுவிலக்கு கொண்டுவர நாம் ஒருமனதோடு ஜெபிப்போம். இதற்கு மாற்று வருமானமாக கோடி கோடியாய் வருவாய் தரும், தனியார் நடத்தி வரும், கிரானைட் மற்றும் கார்னெட் மணல் தொழிலை தமிழக அரசு எடுத்து நடத்தினால் பூரண மதுவிலக்கு கொண்டு வரலாம். டாஸ்மாக்கிலிருந்து வரும் வருமானத்தைவிட, இது அதிக வருமானத்தை கொடுக்கும். நாம் சேர்ந்து ஜெபிக்கும் போது, நிச்சயம் தேவன் நம் ஜெபத்தை கேட்டு பதில் கொடுப்பார்.

இயேசுவின் சமாதானம் பத்திரிக்கையை படித்து ஆசீர்வாதம் பெறும். ஆயிரக்கணக்கானோர் எங்களை தொலைபேசி, கடிதம், இமெயில் மூலமாக உற்சாகப்படுத்தி வருகிறீர்கள். இது, எங்கள் திறமையோ, ஞானமோ அல்ல. எங்களுக்கு ஒன்றும் தெரியாது. எங்களை இயக்கும் ராஜாதி ராஜா சர்வ வல்லமையுள்ள தேவன் இயேசு ஒருவர் தான் எல்லா புகழ்,துதி, கனம், மகிமைக்கு பாத்திரமானவர். ஆகவே எங்களை உற்சாகப்படுத்தும் உங்களுக்கு நன்றி சொல்லி, தேவன் இயேசுவை மகிமைப்படுத்துகிறேன். கிருபையும், சமாதானமும் உங்களில் பெருகுவதாக.

நாங்கள் தினமும் உங்களுக்காக ஜெபிப்பது போல நீங்களும்
எங்களுக்காக தினமும் குறைந்தது **1 நிமிடமாவது** ஜெபிக்க அன்பாய் கேட்டுக் கொள்கிறேன்.



**With Deep Love & Affection With Prayer**

உங்கள் அன்புத் தம்பி / அண்ணன்

- ஏ.எஸ்.வி. ராபின்.

இயேசுவின் சமாதானம்
மாத இதழ்

**Final Designing & Editing**
ராஜ்லின்ட் ராபின் B.Sc.,Vis.com., (M.B.A.)
Managing Partner, Rajlynt Exports & Imports

கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புது பெலன் அடைந்து, கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து, எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள் (ஏசாயா 40:31)

# இயேசுவுக்காக காத்திருங்கள்



- ஏ.எஸ்.வி. ராபின்

## இயேசு தரும் புதுபெலன்

நாம் எல்லா பக்கமும் நெருக்கப்பட்டாலும், ஒடுங்கிப் போகிறது இல்லை ( 2கொரி 4:8 ) ஏனெனில் கர்த்தர் இயேசுவுக்காக காத்திருக்கும் நம்மை அவர் உயர்வாய் வாழ வைப்பார். இவ்வுலகில் பாடுகளே இல்லாத மனிதர்கள் இல்லை. தேவ பிரசன்னத்திற்காக இயேசுவின் பாதத்தில் காத்திருப்பவர்கள் சோர்ந்து போக மாட்டார்கள். ஏனெனில் இயேசு அவர்களுக்கு தம்முடைய பரிசுத்த ஆவியின் பெலத்தை தருவார். ஒரு மனிதனுடைய பணம், சொத்து, நகைகள், பதவி, அதிகாரம், இவை மனிதனுக்கு சோர்ந்து போகும் வேளையில் பெலன் தர முடியாது. உலகில் எல்லாவற்றுக்கும் மேலான, ஒப்பற்ற பொக்கிஷமாகிய இயேசு மட்டும் தான் நம்மை பெலப்படுத்த முடியும்.

பைபிளில் தாவீது என்ற, தேவனுக்கு பிரியமான மனிதரைப் பாருங்கள். அவர் வாழ்வில் வந்த போராட்டங்கள், சோதனைகள், எதிர்ப்புகள், நெருக்கங்கள் ஏராளம். ஆனால் கர்த்தர் உதவி செய்வார் என்று கர்த்தருக்காக காத்திருந்ததால், இவருக்கு எல்லாவற்றிலும் தேவன் வெற்றியைக் கொடுத்தார்.

## பொறுமை தரும் பலன்

ஒரு பழத்தில் 9 சுளைகள் இருக்கிறது போல, ஆவியின் கனியில் 9 குணங்கள் உள்ளன. நீடிய பொறுமை என்பது இந்த குணங்களில் ஒன்று ( கலா 5 :22 ) நாம் வெளியூர் செல்லும்போது ரெயிலையோ, பஸ்ஸையோ, விமானத்தையோ, ஏற்ற வேளையில் பிடிக்க வேண்டுமென்றால், அது கிளம்புவதற்கு முன்பாக நாம் அங்கு சென்றிருக்க வேண்டும். சில வேளையில் 1மணி நேரமோ, 2மணி நேரமோ காத்திருப்போம். இயேசுவை முழுமையாய் அறிவதற்கு முன் நம்மில் பலர் சினிமா



பார்ப்பதற்காக தியேட்டரில் டிக்கெட் வாங்குவதற்கு பலமணி நேரம் வரிசையில் காத்திருந்து பின் 2 1/2 மணி நேரம் தியேட்டர் உள்ளே அமர்ந்து நம் வாழ்வில் பல நாட்களை வீணடித்திருப்போம். 1981-82ல் நான் செங்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் போது சில நாட்கள் காலை வகுப்பில் அட்டெண்டன்ஸ் (Attendance) கொடுத்துவிட்டு மதியம் சில நண்பர்களோடு தென்காசி சென்று தியேட்டர் வரிசையில் காத்திருந்து சினிமா பார்த்திருக்கிறேன். ஆனால் இப்பொழுது அதை நினைத்தால் எனக்கு வெட்கமாகவும், வேதனையாகவும் இருக்கிறது. அப்பொழுது சினிமா பார்ப்பது தவறு, அது பாவம் என்று எனக்கு யாரும் சொல்லித்தரவில்லை.

தாவீது தன் அனுபவத்தை சொல்கிறார். கர்த்தருக்கு காத்திரு அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார் (சங் 27:14)

## நிறைவேறும் தரிசனம்

நம் ஒவ்வொருவரைக் குறித்தும் தேவன் இயேசு, ஒரு திட்டத்தை வைத்திருப்பார். அதை நமக்கு பல வகையாய் வெளிப்படுத்துவார். இவை தரிசனமாக (vision ). சொப்பனமாக, (கனவு ) இயேசுவின் மெல்லிய சத்தமாக, வேத வசனம் மூலமாக சிறந்த வெளிப்பாடு பெற்ற தேவ ஊழியரின் தீர்க்கதரிசனமாக இருக்கலாம். இயேசுவின் திட்டம் நம் வாழ்வில் நிறைவேறுவதற்கு நாம் பொறுமையோடும், நம்பிக்கையோடும் காத்திருக்க வேண்டும். குறித்த காலத்திற்கு தரிசனம் வைக்கப்பட்டிருக்கிறது. அது தாமதித்தாலும், காத்திரு. அது நிச்சயம் வரும். (நிறைவேறும்) என்று பைபிளில் ஆபகூக் 2ம் அதிகாரம் 3-ம் வசனத்தில் பார்க்கிறோம். யோசேப்பிற்கு கனவு மூலமாக, தேவன் யோசேப்பை ஆசீர்வதிக்கப் போவதைக் குறித்து வெளிப்படுத்தினார்.

ஆனால் அதற்கு முன்பு அவருடைய சகோதரர்கள் அவரை பொறாமையின் காரணமாக தண்ணீர் இல்லாத குழியில் தள்ளினர். பின்பு தேவ திட்டத்தின்படி அங்கிருந்து எகிப்து தேசத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, சில பாடுகளுக்கு பின்பு ஆசீர்வதிக்கப்பட்டார். இந்த காலக் கட்டத்தில் பொறுமையோடு யோசேப்பு தேவ சமூகத்தில் காத்திருந்தார். அதற்கு பின்பு எகிப்து தேசத்தில் உயர்ந்த பதவி, செல்வாக்கு, செல்வம் எல்லாவற்றையும் தேவன் அவருக்கு கொடுத்தார்.

ஆகவே நாமும், இயேசுவின் சமூகத்தில் பொறுமையாயய் காத்திருக்க வேண்டும். அவருக்கு உண்மையாய் இருக்க வேண்டும். ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்ட பிறகும் இயேசுவை விட்டு விடாமல் நம் இறுதி மூச்சுவரை இயேசுவின் பாதத்தில் காத்திருக்க வேண்டும். அப்பொழுது தேவன் இயேசு நம்மை உயர்வாய் வாழவைப்பார்.



visit our website
www.peaceofjesus.org
(or) peace of jesus asv robin



இதன் மூலம் இந்தியா மற்று உலக தேசமெங்கும் இயேசுவின் சமாதானம் ஊழியங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், இயேசுவின் சமாதானம் பத்திரிக்கையை (E-magazine) வாசிக்கவும், ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் கொடுத்த வீடியோ செய்திகளைப் பார்க்கவும் தேவன் இயேசு கிருபை செய்திருக்கிறார். நீங்கள் இதன்மூலம் இயேசுதரும் ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்ள அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.



பைபிளும் நாட்டு நடப்பும்

உண்மை சம்பவம்

# சீரழிக்கும் சினிமா

- ஏ.எஸ்.வி. ராபின்

சமீபத்தில் ஒரு நடிகரின் படம் குறிப்பிட்ட நாளில் வெளிவராததால் கோவையில் ஒரு வாலிபர் தற்கொலை செய்து கொண்டார். இன்று மக்கள் வாழ்வு சீர்கெட சினிமா பெரும் பங்கு வகிக்கிறது.

## தந்தையின் கண்ணீர்

தான் தூக்கி வளர்த்த மூத்த மகனை சடலமாய் கீழிறக்கிய அப்பா ஆனந்தராஜ் ஓலமிட்டப்படியே யாருங்க இந்த நடிகர். ஒரு நடிகர் மெட்ராஸ்ல எங்கியோ இருந்து நடிச்சு கோடி கோடியா சம்பாதிச்சுட்டு இருக்கிற ஒருத்தரு. அவருக்கு என் பையனை யார்னே தெரியாதுங்க. என் பையன் விஷ்ணு சின்னதா இருக்கும் போதே இவங்கம்மா... மேல போய் சேர்ந்துட்டாங்க.

ஆஸ்பத்திரி கக்கூஸ் ரூமை கால் புண்ணோட கழுவி மார்லயும் மடியிலயும் போட்டு நான் தான் இவனையும், இவன் தம்பியையும் பாடுபட்டு வளர்த்தேன். படிப்பு வரைலன்னு இவன் டூவீலர் மெக்கானிக்கா போனான். ஒரு வண்டிய பார்ட் பார்ட்டா பிரிச்சு மாட்ற அளவுக்கு வேலைய கத்துக்கிட்டவன். என்னை ஒட்கார வச்சு சாப்பாடு போடுவான்னு இப்பவரைக்கும் நெனைச்சுட்டு இருந்தேன்.

ஆனா அந்த நெனப்புல ஒரு நடிகரோட படம் மண்ணள்ளிப் போட்ருச்சே. எங்கியோ யார்னே தெரியாத ஒருத்தர் மேல வச்சிருந்த அன்பை பெத்த அப்பன் என் மேலயோ, அவன் தம்பி மேலயோ ஏன் வைக்காமப் போனான்னுதான் எனக்குத் தெரியலீங்க.



தந்தை ஆனந்தராஜ்

## தந்தையின் கண்ணீர் வேண்டுகோள்

அய்யோ... என்னோட நிலைமை எந்த அப்பனுக்கும் வரக்கூடாது. இனி எந்தப் பசங்களும் இப்படி ஒரு முட்டாள்தனமான காரியத்தை பண்ணிடாதீங்க என்று கைகூப்பி கதறி கும்பிடுகிறார் இளைய சமுதாயத்தை நோக்கி...

## தம்பியின் கண்ணீர்

அண்ணா... உனக்கு என்னை விட நடிகர் பெரிசா? என்னைய நல்லா படிக்க வைப்பேனல்லாம் சொன்னியே... இப்ப என்னையும் வேலைக்கு போக வச்சுட்டியே என தேம்புகிறான், விஷ்ணுவின் தம்பியான நித்தின் குமார்.

## உங்கள் ஆசீர்வாதம்

சினிமா என்பது சிறுவர்முதல் பெரியவர்கள் வரை வாழ்வை சீரழிக்கும் ஒரு பெரிய மீடியா. இன்றைய சினிமா தேவையற்ற காதலும், ஆபாசமும், முறையற்ற மற்றும் தகாத உறவுகளும், வன்முறையும், ஆடம்பரத்தையும், பெருமையையும், கொலைவெறியையும் தூண்டுகிறதாக இருக்கிறது. இதைப்பார்ப்பவர்கள் பலர் பாவத்தில் விழ ஏதுவாக இருக்கிறது. இயேசுவை உள்ளத்தில் முழுமையாய் ஏற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது சினிமா உங்களுக்கு அருவருப்பாய் தோன்றும்.

பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்படியுங்கள். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும். பூமியில் உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும். உன் தாயையும் கனம் பண்ணுவாயாக. (எபே 6:1, 3)

பெண்கள் பகுதி



# இனிப்பா? காரமா?





- பொற்செல்வி ராபின்

என் பாசத்திற்குரிய சகோதரியே, உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். தேவன் உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக.

## ஜெபம் கேட்பார்

கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார். என்று சங்கீதம் 40:1 ம் வசனத்தில் தாவீது கூறியிருக்கிறார். என்னிடமாய் சாய்ந்து, அதாவது என்னை இரக்கத்தோடு பார்த்து என் ஜெபம் கேட்டார் என்று தாவீது கூறியிருக்கிறார். நம்மையும், அண்ட சராசரங்களையும் உருவாக்கிய தேவாதி தேவன் இயேசுவின் அன்பு இப்படிப்பட்டது. அவருக்கு பயந்து, அவர் பைபிளில் விதித்த கட்டளைகளை நாம் கடைபிடித்து வாழ்ந்தால், இயேசு இப்படியே நம் பக்கம், தம்முடைய பார்வையை செலுத்துவார். நம் ஜெபத்தை உற்று கவனித்து, உதவி செய்வார்.

## சுவையான விருந்து

சில நேரங்களில் சிலர் நம்மை நேசித்து, நம்மை விருந்துக்கு அழைத்து, நமக்கு உணவை அன்போடு பரிமாறுகிறார்கள். நமக்கு முன்பாக காரமான உணவு வகைகளை வைக்கிறார்கள். நாம் உணவு அருந்தியதும், இனிப்பான பழங்களையோ, அல்லது இனிப்பு வகைகளையோ நமக்கு முன்பாக அன்போடு வைக்கிறார்கள். காரமான உணவும் நமக்கு அவசியம். இனிப்பான உணவும், நமக்கு அவசியம். இதோடு அன்பான வார்த்தைகளோடு, உணவை நமக்கு அவர்கள் தருவதால் நம் உள்ளம் மகிழ்கிறது.

## இனிப்பா? காரமா?

இதுபோல சில மனிதர்கள், நம்மோடு இனிமையாக பேசி நம்மை சந்தோஷப்படுத்துகிறார்கள். இவர்களே சில நேரத்தில் காரமான வார்த்தைகள் அதாவது கோபமாய் பேசி நம்மை துக்கப்படுத்தி விடுகிறார்கள். வாழ்க்கை என்பது இனிப்பும், காரமும் கலந்த விருந்து போலத்தான். நம் உள்ளம் அன்புக்காக ஏங்கும் உள்ளம் தான். அதிகமான இனிப்பு நமக்கு நல்லதல்ல, காரம் உணவை செரிக்க வைத்து உணவு உடலுக்கு பயன்பட உதவுகிறது. மனிதர்களின் கோபம் நமக்கு மனத்தாழ்மையை கற்று தருகிறது. உலகில் வாழும் நாள் வரைக்கும், நாம் இப்படி காரம் போன்ற வார்த்தைகளைப் பேசும் மனிதர்களை தவிர்க்க முடியாது.



## பொறுமை தாரும்

சங்கீதம் 39 : 1 ல் தாவீது கூறுகிறார், என் நாவினால் (நாக்கினால்) பாவம் செய்யாதபடிக்கு, நான் என் வழிகளைத் காத்து, துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயை கடிவாளத்தால் அடக்கி வைப்பேன் என்றேன். யாராவது தன்னை கடினமாய் பேசினால் தன் நாக்கினால் பாவம் செய்யாதபடி நாக்கை அடக்கி கட்டுப்படுத்தி விட வேண்டும் என்று உணர்ந்து வாழ்ந்தவர் தாவீது. என் ஜெபத்தை தேவன் கேட்கிறார் என்ற நம்பிக்கை இவருக்கு ஏற்பட காரணம் இந்த பொறுமை தான். இதன் காரணமாக இவரிடம் மனத்தாழ்மை வந்தது. இதோடு தேவன் இயேசு அருளிய 40 ஆண்டுகள் அரசாட்சி, சிறந்த புகழ், செல்வம், தீர்க்காயுசும் வந்தன. நம் வாழ்க்கை இனிப்பா, காரமா? என்று யோசிக்காமல் இரண்டையும் ஏற்றுக் கொள்வோம். அப்பொழுது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.

ஆரோக்கியம்

# பப்பாளி



சுவையிலும், சத்து மிகுதியிலும் பப்பாளிப் பழத்திற்கு தனி இடம் உண்டு. எளிதில் ஜீரணமாகும், மருத்துவ குணம் மிகுந்தது.100 கிராம் பழத்தில் 39 கலோரிகள் ஆற்றல் உடலுக்கு கிடைக்கிறது. கொழுப்புச்சத்து கிடையாது. தாது உப்புக்களும், வைட்டமின்களும் ஏராளம் உள்ளன.

100 கிராம் பழத்தில் 61.8. மில்லிகிராம் வைட்டமின் சி உள்ளது. இது ஆரஞ்சு மற்றும் எலுமிச்சையில் கிடைப்பதை விட அதிக அளவு என்பது குறிப்பிடத்தக்கது. தினசரி உடலில் சேர்க்க வேண்டிய வைட்டமின் சி-யில் 103 சதவீதம் 100 கிராம் பப்பாளி உண்பதால் கிடைக்கிறது. உடலுக்கு தீங்கு தரும் பிரீ – ரேடிக்கல்களை விரட்டுவதிலும் நோய்த்தடுப்பு மண்டலத்தை புத்துணர்ச்சியோடு வைப்பதிலும் வைட்டமின் சி பங்கெடுக்கிறது. பப்பாளிப் பழத்தில் வைட்டமின் ஏ மிகுதியான அளவில் உள்ளது.

தோல் வளவளப்புத் தன்மையுடன் இருக்கவும், பார்வைத்திறனுக்கும் வைட்டமின் ஏ அவசியம். வேறு நோய்களுக்கு காரணமாகும் ஆக்சிஜன் பிரீரேடிக்கல்களை விரட்டுவதில் பங்காற்றுகிறது. புற்று நோய்களுக்கு எதிராக செயல்படும். இதில் போலிக் அமிலம், பைரிடாக்சின், ரிபோபிளேவின், தயாமின் போனற் பி - காம்ப்ளக்ஸ் வைட்டமின்கள் உள்ளன. இவை உடலுக்கு புத்துணர்ச்சி வழங்கும். புத்துணர்ச்சி மிக்க பப்பாளியில் அதிக அளவில் பொட்டாசியம் உள்ளது.

உடல்செல்கள் மற்றும் தோல் வளவளப்புத் தன்மையுடன் விளங்க பொட்டாசியம் அவசியம். இதயத்துடிப்பு மற்றும் ரத்த அழுத்தத்தை கட்டுக்குள் வைப்பதிலும் இது உதவி புரிகிறது. பப்பாளி விதைகள் ஒட்டுண்ணிகளுக்கு எதிராகவும், வலியை குறைப்பதிலும் பயன்படுகிறது. வயிற்றுவலி, படர்தாமரை ஆகியவற்றுக்கு மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது.

நன்றி : தினத்தூது, பிற்பகல், தினத்தந்தி, தினகரன், தமிழ் முரசு, தி நியூ இண்டியன் எக்ஸ்பிரஸ், Google

# கேள்வி பதில்

ஏ.எஸ்.வி. ராபின்

நான் தொழில் செய்து வருகிறேன். சமீபத்தில் இயேசுவை என் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டேன்.
நான் இயேசுவுக்கு பிரியமாய் வாழ விரும்புகிறேன். நான் என் வருமானத்தில் தேவனுக்கு ஏழைகளுக்கு, ஊழியங்களுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும்?

**ஆர். சேகர், கல்கத்தா**



இயேசுவை ஏற்றுக் கொண்ட நீங்கள் தேவன் இயேசு விரும்புகிறபடி வாழ்ந்து, அவருடைய கட்டளைகளை கடைபிடிக்க விரும்புவது குறித்து, மிகுந்த சந்தோஷம். மல்கியா 3:10 -ன்படி தேவனுடைய ஆலயத்திற்கு உங்கள் வருமானத்தில் 10ல் ஒரு பகுதியை கொடுங்கள். இது தசமபாகம். மற்ற 9 பகுதியிலிருந்து சுவிசேஷம் அறிவிக்கும் ஊழியங்களுக்கு 1 பகுதியை கொடுங்கள். மற்ற 8 பகுதியிலிருந்து 1 பகுதியை எடுத்து ஏழைகளுக்கு உதவி செய்யுங்கள். ஏழைகளை நேரில் சந்திக்கும்படியான சூழ்நிலையில்லை என்றால், ஏழைகளுக்கு உதவி செய்யும் ஊழியங்களுக்கு கொடுங்கள். மீதியுள்ள 7 பகுதியில் ஒரு பகுதியை திக்கற்றப் பெற்றோருக்கு கொடுங்கள். 6 பங்கை உங்கள் குடும்பப் பராமரிப்புக்கு பயன்படுத்துங்கள். இந்த 6 பங்கு பெரிய தொகையாய் இருக்கும் என்று கர்த்தர் இயேசு சொல்கிறார். இதை தேவன் இயேசு ஆசீர்வதிப்பார். தேவாலயம், ஊழியம், ஏழைகளுக்கு இன்னும் அதிகமாக கொடுக்க கொடுக்க உங்கள் வருமானத்தை இன்னும் அதிகமாக பெருக செய்வார். இப்படி நீங்கள் இயேசுவை சந்தோஷப்படுத்தலாம்.

எனக்கு தெரிந்து மாதம் பலகோடி ரூபாய் வியாபாரம் (turnover) செய்யும் தொழிலதிபர்கள் உண்டு. அவர்கள் தொழில் உயர்வின் ரகசியத்தை அறிந்திருக்கிறேன். ஆரம்ப நாட்களில் கஷ்டப்பட்டவர்கள்தான். வியாபாரம், தொழில் பெருக பெருக தேவன் இயேசுவின் ஊழியங்களுக்கு அளவில்லாமல், மாதம் (லட்சக்கணக்கில்) காணிக்கை கொடுப்பதை அறிந்து என் தேவன் இயேசுவை மகிமைப்படுத்துகிறேன். தேவனுடைய ராஜ்ஜியத்தை உயர்த்தும், ஒவ்வொரு வியாபாரத்தையும், தொழிலையும் இயேசு அளவில்லாமல் ஆசீர்வதித்து உயர்த்துவார்.

## ஆசீர்வாதம் தரும் இயேசுவின் சமாதானம்




சகோதரர் ஏ.எஸ்.வி. ராபின் அவர்களுக்கு...
தங்களின் ஆகஸ்டு மாத இயேசுவின் சமாதானம் மாத இதழ் கிடைத்தது. படித்து பார்த்தோம். மிகவும் நன்றாக எழுதப்பட்டிருந்தது. நீங்கள் எழுதிய இயேசுவை நோக்கிப் பாருங்கள், பொற்செல்வி ராபின் எழுதிய உங்கள் கைகளில், கட்டுரைகள் நன்றாக உள்ளன. வேத வசன ஆதாரத்துடன் உள்ளது. வாழ்த்துக்கள்.

அன்புடன்
மு.வெங்கடசுப்பிரமணியன்
தாசில்தார்
சாந்திநகர், திருநெல்வேலி



# தோழிகள்

அன்புத் தம்பி, தங்கையே, பரிசுத்த தேவன் இயேசுவின் பெயரால் உன்னை அன்புடன் வாழ்த்துகிறேன். தேவாதி தேவனுக்கே மகிமை!

- பொற்செல்வி ராபின்

## உண்மை வெல்லும்

அவர் நெரிந்த நாணலை முறியாமலும், மங்கி எரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார் என்று ஏசாயா 42:3ம் வசனத்தில், இறைவன் இயேசுவைப் பற்றி எழுதப்பட்டுள்ளது. பைபிளில் எழுதப்பட்டுள்ள இந்த காரியத்தை என்னுடைய பள்ளி, மற்றும் கல்லூரியில் படித்த 2 தோழிகள் வாழ்வில் இயேசு நிறைவேற்றியதை நான் கண்டேன். நியாயத்தை உண்மையாய் வெளிப்படுத்தி, நெரிந்த நாணலைப் போலவும், மங்கி எரிகிற திரியைப் போலவும் காணப்படுகிற நம் விசுவாசத்தை பலப்படுத்தி நம்மை ஒளி கொடுக்க செய்பவர் நம் தேவன் இயேசு.

## கல்லூரிப்பருவம்

என் பெற்றோர் பிறந்தது திருநெல்வேலி மாவட்டத்தில். ஆனால் மஹாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள பம்பாய் நகரில் வாழ்ந்தார்கள். என் பள்ளி பருவமும், கல்லூரி பருவமும் இங்கு தான் கழிந்தது. எனக்கு 2 நெருக்கமான சிநேகிதிகள். பள்ளியில் ஒன்றாய் படித்து, பின்பு வேறுவேறு கல்லூரியில் சேர்ந்தோம். ஆனாலும் ஒன்றாய் சேர்ந்து எங்கள் வீட்டருகே இருந்த இந்த தோழிகள் வீட்டில் பாடங்களை படித்தோம். இவர்கள் வீட்டில் ஆண் பிள்ளைகள் இல்லாததால் ஒன்றாய் அமர்ந்து பாடங்கள் படிக்க என் பெற்றோர் அனுமதித்தனர். எனக்கு 5 சகோதரர்கள், ஆகவே எங்கள் வீட்டில் நாங்கள் ஒன்றாய் படிக்க முடியாத நிலை.



## வாலிபத்தின் சோதனை

ஒரு தோழி மிகவும் துணிவு கொண்டவள். அப்பொழுதே கல்லூரியில் உடன் படித்த மாணவனோடு வெளியே செல்வது, பழகுவது இதையெல்லாம் செய்தாள். இவளைப் பற்றி அறிந்ததால் இன்னொரு சிநேகிதிக்கு கல்லூரி முதலாம்ஆண்டிலேயே திருமணத்தை பெற்றோர் நிச்சயித்துவிட்டார்கள். அதனால் அவள் உள்ளம் திருமணம் செய்யப்போகும் உறவுக்காரரைப் பற்றியே சிந்தித்தது. துணிவு கொண்ட அந்த

தோழிக்கு நான் அநேக புத்திமதிகள் கூறும் நிலை ஏற்பட்டது. அவளுடைய பெற்றோர், அவளை அடித்தார்கள், கண்டித்தார்கள், பயன் இல்லை.

## அவளுக்கு புத்திமதி

நான் இவளிடம் இவ்வாறு புத்திமதி கூறினேன். இந்த வயதில் நீ விரும்புகிறவனை திருமணம் செய்வது கூடாத காரியம். உனக்கு வயது 18. அவனுக்கும் வயது 18 அவன் உழைத்து, சம்பாதித்து உன்னை பராமரிக்க கூடிய பருவம் இது அல்ல. அப்படியானால் வீணாக நீங்கள் பழகுவதினால் என்ன பயன்? திருமணம் என்பது தேவனால் பரலோகத்தில் நிச்சயிக்கப்பட்டு இவ்வுலகில் நிறைவேற்றப்படுகிறது. தேவனுடைய திட்டத்தை மீறி நடப்பாயா? மீறி நடந்தால் உனக்கு கண்ணீரும், வேதனையும் தான் உண்டாகும்.

## என்னுடைய சாட்சி

மேலும் அவளிடம் இவ்வாறு கூறினேன். நான் என் பெற்றோரை மதித்து நடத்தி, அவர்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கிறேன். பைபிள் வாசித்து, தேவன் இயேசுவிடம் பிரார்த்தனை செய்து, பாடங்களை படித்து வருகிறேன். ஞாயிறு தோறும் ஆலயம் செல்கிறேன். எங்கு இருந்தாலும் தேவனுடைய பாதுகாப்பில் வாழவே விரும்பி, அவருடைய உதவியை நாடுகிறேன். வீட்டில் என் பெற்றோருக்கு செய்ய வேண்டிய உதவிகளை செய்து வருகிறேன். பணிப்பெண் செய்யும் வேலைகள் போக சிறுசிறு உதவிகளை செய்து என் தாயாரை சந்தோஷப்படுத்தி வருகிறேன். லீவு நாட்களிலும் தேவையில்லாத சிந்தனையை தவிர்க்க, நடத்தப்போகிற புதிய பாடங்களை படித்து, வரபோகும் தேர்வுக்கு ஆயத்தமாகிறேன் என்று என் வாழ்க்கையை, சாட்சியாக கூறினேன். வாழ்க்கையை விளையாட்டாய் நினைத்து விளையாடி விடாதே. நீ உண்மையாய் இருந்தால் தேவன் உனக்கு உதவி செய்வார் என்பதை நம்பு என்றேன்.



இவள் திருந்தி, பெற்றோர் ஏற்பாடு செய்தவரை திருமணம் செய்து, மகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருக்கிறாள். வாலிப தங்கையே, உன் தோழிக்கு, வாலிப தம்பியே உன் தோழனுக்கு நல்ல புத்திமதி கூறு. இப்படிப்பட்டவர்களுக்காக ஜெபி. வாழ்வின் உண்மை நிலை அறிந்து வாழ்ந்தால் மட்டுமே, குழியில் விழாமல் வாலிப பருவத்தில் தப்பலாம்.

## 30 ஆண்டுகள் இருந்த குடிப் பழக்கத்தை மாற்றிய தேவன் இயேசு



கே. வின்சென்ட்
கன்னிவாடி,
திருப்பூர்.

அன்பு சகோதரருக்கு,

எனக்கு 30 ஆண்டுகளாக குடிப்பழக்கம் இருந்தது. எல்லா செல்வமும் குடியினால் அழிந்தது. இமயம் டி.வி. நிகழ்ச்சியில், உங்கள் பரவச நேரம் நிகழ்ச்சியை என் மனைவி பார்த்தாள். பின்பு, இயேசுவின் சமாதானம் ஜெபக்குழுவினரோடு தொடர்பு கொண்டு, தொலைபேசியில் ஜெபிக்க சொன்னாள். தொலைபேசியில் ஜெபவீரர் ஜெபித்தபோது 30 வருடங்கள் இருந்த குடிப்பழக்கத்தை மாற்றி, தேவன் இயேசு என்னை விடுதலையாக்கினார். தேவனுக்கே மகிமை.



உலக மக்களின் நல்வாழ்வை விரும்பும்

# இயேசுவின் சமாதானம் ஊழியங்கள்

## ஜெபித்துக்கொள்ளுங்கள்

- ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின், ராஜ்லின்ட் ராபின்

- திக்கற்றோர், ஊனமுற்றோர், முதியோர் மத்தியில் ஊழியம்
- உள்தேச, வெளிதேச பிரசங்க ஊழியம்
- ஏழைகள் மத்தியில் சுவிசேஷம் மற்றும் உதவி
- ஆதிவாசிகள் மத்தியில் ஊழியம்
- மருத்துவமனை ஊழியம்
- தொலைக்காட்சி ஊழியம்
- உபவாச ஜெப ஊழியம்
- தொலைபேசி ஊழியம்
- மலைப்பகுதி ஊழியம்
- பத்திரிக்கை ஊழியம்
- கைப்பிரதி ஊழியம்
- புத்தக ஊழியம்
- கடித ஊழியம்
- பாடல் ஊழியம்
- மனநலகாப்பக ஊழியம்
- மிஷினரி ஊழியம்
- இலங்கை அகதிகள் மத்தியில் ஊழியம்
- விளம்பரம் மூலம் சுவிசேஷ ஊழியம்




















# இயேசுவின் சமாதானம் ஜெபம் & ஆலோசனை மையம்

## ஜெப வேண்டுகோள் (சபை ஊழியம் அல்ல)

## *Peace of Jesus Prayer & Counseling Centre*

கர்த்தர் இயேசுவின் கிருபையினால் இயேசுவின் சமாதானம் நற்செய்தி கூட்டங்கள், தனிஜெபம், குடும்ப ஆலோசனை, தொலைபேசி, குழுஜெபத்தின் மூலமாக இதுவரை பல ஆயிரக்கணக்கான வாலிபப்பிள்ளைகளும், குடும்பத்தினரும், ஆசீர்வதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் பாவம், சாபம், பில்லிசூனிய மாந்திரீக கட்டுகளிலிருந்து விடுதலைப்பெற்று, தற்கொலையிலிருந்து, விடுவிக்கப்பட்டு வாழ தேவன் இயேசு கிருபை செய்திருக்கிறார்.

இந்த ஊழியத்திற்கென்று இதுவரை சொந்த இடமில்லை. ஆகவே ஜெபம் மற்றும், ஆலோசனை மையம் கட்டும்படியாக தேவன் இயேசு எங்கள் உள்ளத்தை மிகவும் நெருக்கி ஏவுகிறார். இடத்திற்கு மட்டும் **ரூபாய் 4 கோடியே 80 இலட்சம்** தேவைப்படுகிறது. கர்த்தரின் கிருபையினால் இடம் வாங்கி கட்டியபின் அனைத்து மக்களும், வந்து ஜெபம் மற்றும் ஆலோசனைப் பெற்றுச் செல்லவும், இங்கு சிறப்பு கூட்டங்களில் கலந்து கொண்டு விடுதலை, அற்புதம், ஆசீர்வாதம், சமாதானம் பெற்றுச் செல்லும்படியாக தேவன் கிருபை செய்வார். ஆகவே இந்த மகத்தான பணிக்கான பணத் தேவை சீக்கிரம் சந்திக்கப்பட உங்கள் தனி ஜெபம், குடும்ப ஜெபம், குழு ஜெபத்தில் நினைவு கூர்ந்து, ஜெபிக்க அன்போடு கேட்டுக் கொள்கிறோம். தேவன் இயேசு உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பார். கர்த்தர் இயேசுவையும், இயேசுவின் சமாதானம் ஊழியத்தையும், எங்களையும், நேசிக்கிறவர்கள், இவ்வூழியம் மூலம் ஆசீர்வாதம் பெற்றவர்களில் நான்கு பேர், இந்த இடத்தை வாங்குவதற்கான தொகையில் ஒரு குறிப்பிட்ட பகுதியை தங்கள் சொந்த இடத்தை, நிலத்தை விற்றுத்தருவதாக பொருத்தனை செய்திருக்கிறார்கள். கர்த்தர் இயேசுவுக்கே மகிமை

**- ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின்.**

## இந்த ஊழிய தேவைக்கான உங்கள் ஜெபம்

இயேசுவின் சமாதானம் ஊழியத்தின் எல்லை ஒவ்வொரு மாதமும் விரிவாகிவருவதால், பணத் தேவை ஒவ்வொரு மாதமும் அதிகமாகிறது. ஒரு மாதத்திற்கு பல லட்ச ரூபாய் தேவைப்படுகிறது. இத்தேவைகள் சந்திக்கப்பட மறக்காமல் நீங்கள் உங்கள் ஜெபத்தில் தாங்கும் படி அன்போடு கேட்டுக் கொள்கிறோம். தேவன் இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக.

## உங்கள் நன்கொடை

நீங்கள் இவ்வூழியத்திற்கு நன்கொடை அனுப்ப விரும்பினால் இந்தியாவில் நீங்கள் எங்கு வசித்தாலும் கீழ்கண்ட வங்கிக் கிளைகளில் நேரடியாக பணத்தைச் செலுத்தலாம் அல்லது மணியார்டர், டி.டி. மூலமாக நன்கொடை அனுப்பலாம்.

| | | |
|---|---|---|
| ICICI Bank | PEACE OF JESUS MINISTRY & TRUST<br>A.S.V. ROBIN | A/c No. 615201134411<br>A/c. No. 615201500867 |
| IDBI BANK | PEACE OF JESUS MINISTRY | A/c No. 006102000034441 |
| State Bank of India | A.S.V. ROBIN | A/c. No. 31682257041 |
| TMB | A.SOLOMON VICTOR ROBIN | A/c. No. 058100050303244 |
| Indian Overseas Bank | A.S.V. ROBIN | A/c. No. 010601000025999 |
| इंडियन बैंक Indian Bank | YESUVIN SAMADHANAM<br>A.S.V. ROBIN | A/c No. 725420502<br>A/c. No. 434465781 |

தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட

# கிராம மிஷனரி ஊழியம்

இயேசுவைப் பற்றிய சுவிஷேசம் உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் சொல்லப்பட வேண்டும், அப்போது, முடிவு வரும். (இயேசு வருவார்) மத்தேயு 24:14ன் படி




சகோ. கே.எஸ். ராஜா அவர்களும், ஏ.எஸ்.வி ராபினும் ஒருவருக்கு இயேசுவின் சமாதானம் பத்திரிக்கை கொடுதது இயேசுவைப்பற்றி அறிவித்த போது

## நற்செய்தி நண்பன் ஊழியம்

நாங்கள் நேசிக்கும் ஊழிய குடும்ப நண்பரும், என் உடன் பிறவா அன்பு அண்ணனுமாகிய கே.எஸ். ராஜா அவர்கள் இந்த இரு மாவட்டங்களை மையமாக வைத்து பெரியாம்பட்டி என்ற ஊரில் நற்செய்தி நண்பன் என்ற பெயரில் ஊழியம் செய்து வருகிறார். அவர்கள் பிறந்த வளர்ந்த சாத்தான் குளத்திலிருந்து (தூத்துக்குடி) தேவ அழைப்பை ஏற்று வந்து கடந்த 26 வருடங்களாக கர்த்தர் இயேசுவின் ஊழியத்தை மிகச் சிறப்பாய் செய்து வருகிறார்கள்.

தேவ கிருபையால் இவர்களுக்கு ஜெமி என்ற மனைவியும், ஜின்ஸி நிர்மல் என்ற மகளும், நிர்மல் என்ற மருமகனும், ஜோயல் என்ற மகனும் உள்ளனர்.

ஒவ்வொரு இரண்டாவது சனிக்கிழமையும் பல ஆயிரம் மக்களை கூட்டிச் சேர்த்து உபவாச ஜெபத்தையும், ஞாயிறு ஆராதனையும் நடத்தி வருகிறார்கள். சிறுவர் இல்லம் ஒன்றை தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். முதியோர் மற்றும்

விதவைகளுக்கு உதவி செய்யும் நலத்திட்டங்களையும், செய்து வருகிறார்கள்.

## இணைந்து கிராம ஊழியம்

கடந்த ஆண்டு இந்த 2 மாவட்டங்களைக் குறித்து தேவன் இயேசு அவர்களுக்கு நிறைவேற்றும்படியாக கொடுத்த திட்டத்தை என்னிடம் கூறினார்கள். சுவிசேஷம் அறிவிக்கப்படாத இடங்களில் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்று எங்களோடு தேவன் இயேசு ஏற்கனவே ஜெப நேரத்தில் பேசியிருந்தார். இந்த தேவ திட்டத்தை நாங்கள் நிறைவேற்றும் படியாக அநேக நாட்கள் உபவாசத்தோடு, தேவ சமூகத்தில் காத்திருந்தோம். அண்ணன் கே.எஸ். ராஜா அவர்கள் என்னிடம் கூறும் போது, இந்தியாவின் வடமாநிலங்களில் மட்டும்தான் இயேசுவை அறியாத ஜனங்கள் இருக்கிறார்கள் என்று பலர், நினைக்கிறார்கள். நாம் சில ஊழியர்களோடு இணைந்து, இந்த 2 மாவட்டங்களையும் பொறுப்பெடுத்து அவர்களுக்கு அத்தியாவசிய உதவிகளை செய்து (போர்வெல், டியூஷன் சென்டர் போன்றவை) உலக சிருஷ்டிகர் இயேசுவை இவர்களுக்கு அறிவிப்போம் என்று என்னிடம் தன்னுடைய உள்ளத்தின் ஏக்கத்தை பகிர்ந்து கொண்டார்கள்.



பார்வையிட்ட கிராமங்கள்

## கிராம சந்திப்பு

ஆகஸ்ட் 12ஆம் தேதி அண்ணன் கே.எஸ். ராஜாவின் அழைப்பின் பேரில் நான் கிராம மிஷனரி ஊழியத்திற்கு சென்றேன். தர்மபுரியில் கிட்டத்தட்ட 32 கிராமங்கள் உள்ளன. அதில், கதிர்நாயக்கன்பட்டி, மதகிரி, கடகப்பைல் என்ற மூன்று கிராமங்களுக்கு சென்றோம். இவை மலைகளின் மேல் உள்ள சரியான ரோடு வசதியில்லாத கிராமங்கள். இயேசுவை அறியாத இந்த ஏழை மக்களைக் கண்டு என் உள்ளம்



பார்வையிட்ட கிராமங்கள்

அவர்களும், கிராம மக்களுக்கு கர்த்தர் இயேசுவை அறிவித்து இயேசுவின் சமாதானப் பத்திரிக்கையை கொடுத்தோம்.

## மக்களின் நிலை

படிப்பறிவு இல்லாத மக்களாகிய இவர்கள் தங்கள் பெண்பிள்ளைகளை 18 வயதுக்கு முன்பே திருமணம் செய்து கொடுத்து விடுகிறார்கள். குடி, போதை பழக்கம் அதிகமாய் காணப்படுகிறது. இயேசுவை அறியாததினால் இவர்களிடம் மூட நம்பிக்கை அதிகமாக இருக்கிறது. மழை இல்லாததினால் வறட்சி, கூலி வேலை செய்யும் நிலைமை, விவசாயம் பாதிக்கப்பட்ட நிலை காணப்படுகிறது.

வறுமை காரணமாக பெண்பிள்ளைகளை நெல், மண்ணெண்ணெய், கள்ளிப்பால் கொடுத்து கொன்று விடும் அவல நிலைமை. தற்போது தமிழக அரசின் தொட்டில் குழந்தை திட்டத்தினால் பெண், சிசுகொலை குறைந்துள்ளது. இந்த மக்களுக்கு சுவிசேஷம் மற்றும் கல்வி மிகவும் அவசியமாய் இருக்கிறது.

## உங்கள் ஜெபம்


முதலில் இரண்டு மினாரி குடும்பங்களை அனுப்பி வைத்து கர்த்தரை இயேசுவைப் பற்றி அறிவித்து, ஒரு டியூசன் சென்டர் அமைத்து, கல்வி அறிவு கொடுத்து, தேவனுக்கு நேராக வழிநடத்த திட்டமிட்டிருக்கிறோம். மிஷனரி ஊழியம் செய்ய இரண்டு குடும்பத்தினர் எங்களோடு, தொடர்புகொள்ள அன்பாய் கேட்டுக்கொள்கிறோம். இவ்வூழியத்தின் பணத் தேவை சந்திக்கப்பட நீங்கள் பாரத்தோடு ஜெபிக்க அன்பாய் கேட்டுக் கொள்கிறோம். வரும் நாட்களில் இதைப்பற்றி, விரிவான திட்டத்தை உங்களுக்கு அறிவிக்கிறோம்.



விழிப்புணர்வு

# உணவு

ஏ.எஸ்.வி. ராபின்



**தேனை மிதமிஞ்சி சாப்பிட்டால் வாந்தி பண்ணுவாய் (நீதி 25: 16)**

## அஜீரணம்

எந்த உணவையும் அளவிற்கு அதிகமாக சாப்பிட்டால் அது அஜீரணத்தை உண்டு பண்ணி நம் வயிற்றை கெடுக்கும். பழைய கால உணவு முறைக்கும், இக்கால உணவு முறைக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. வாலிப வயதில் (25க்குள்) உணவு நன்றாய் ஜீரணித்து விடுகிறது. 25 வயது முதல் 40 வயது வரை ஜீரண சக்தி கொஞ்சம் குறையும். 40 வயதுக்கு மேல் நாம் சாப்பிடும் உணவில் நாம் கட்டுப்பாடு வைத்துக் கொள்வது நல்லது. ஆகவே இதை நம் மனதில் வைத்து நம் உணவு பழக்கத்தை கடைபிடிக்க வேண்டும்.

அதிகமான உணவினால் வயிற்றில் ஏற்படும் அமிலத்தன்மையும், வாயுக் கோளாறும், எரிச்சலும் நம் இதயத்தை பாதிக்கக் கூடியதாய் இருக்கிறது. இதனால் உறக்கமின்மை, நெஞ்சுவலி ஏற்படுகிறது. இதை கவனிக்காமல் விட்டுவிட்டால் நரம்பு மண்டலத்தை பாதிக்கிறது. இதயத்தில் பய உணர்வும் தோன்றுகிறது. இதனால் மாரடைப்பு ஏற்படக்கூடும். ஆகவே அதிக உணவு ஆபத்தானது. தண்ணீர் அடிக்கடி பருகுவது நல்லது. இது உடலை ஆரோக்கியமாக வைக்கும்.

## ஏற்ற உணவு

கொழுப்புச்சத்துள்ள உணவு, அதிகமான எண்ணெய், நெய் பயன்படுத்தி சமைக்கப்படும் உணவு, இனிப்பு வகைகளைத் தவிர்ப்பது நம் உடலுக்கு நல்லது. காய்கறிகள், கீரைகள். பழங்கள் உடலுக்கு ஆரோக்கியமானது. முட்டை மஞ்சள் கருவில் இதயத்தில் அடைப்பு ஏற்படுத்தும் கெட்ட கொழுப்பு இருப்பதால் மஞ்சள் கருவை தவிர்ப்பது நல்லது. 40 வயதுக்கு மேல் அசைவ உணவை எவ்வளவு குறைக்க முடியுமோ, அவ்வளவு குறைத்து சாப்பிடுவது இதயத்திற்கு நல்லது.

## ஆபத்தான உணவு

பல நாட்களாக குளிர்சாதனப் பெட்டியில் (ப்ரிஜ்ஜில்) உள்ள உணவு நச்சுத்தன்மை உடையது. இதை சமைத்து சாப்பிடுவதால் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு சிலர் இறந்தும் விடுகின்றனர். கடையில் விற்கப்படும் பாஸ்ட் புட் என்று அழைக்கப்படுகிற துரித உணவு சிறுபிள்ளைகளுக்கும் கூட தீங்கு விளைவிக்கக் கூடியது. இவைகளை சமைக்க பயன்படுத்தப்படுத்தும் பழைய எண்ணெய், உணவு கவர்ச்சிகரமாக தோன்ற பயன்படுத்தப்படும் கலர்ப் பொடிகள், சுவைக்காக பயன்படுத்தப்படும் விபரீதமான மசாலாப் பொடிகள் உடலுக்கு அதிகமான கேடு விளைவிக்கக் கூடியது.

இவை அல்சர் என்ற குடல் புண், நரம்புத் தளர்ச்சி, சிறுநீரக பாதிப்பு, கேன்ஸர் போன்ற நோயை ஏற்படுத்தி நிம்மதியை கெடுக்கும். உங்கள் வயிற்றுக்கும், உடலுக்கும் ஒத்துக்கொள்ளாத உணவை, குளிர்பானத்தை நீங்கள் சாப்பிட மற்றவர்களால் வற்புறுத்தப்பட்டாலும், சாப்பிடாமல் உங்கள் நிலைமையை கூறி தப்பித்துக் கொள்ளுங்கள்.

நம் உடல் தேவாதி தேவன் இயேசு தங்கும் ஆலயம் (1கொரி 3:14). அதை ஜாக்கிரதையாய் பாதுகாத்து ஜீவனுள்ள நாளெல்லாம் இயேசுவுக்காய் வாழ்வோம்.

இயேசுவின் சமாதானம் ஊழியம்

# தேவன் தந்த கிருபை

தொடர் - 13 - பொற்செல்வி ராபின்

## இயேசு பெறுகிறார்

மிகவும் சிறியவராகிய என் சகோதரரான.சகோதரியான இவர்களில் ஒருவருக்கு நீங்கள் எதை செய்தீர்களோ. அதை எனக்கே செய்தீர்கள் என்று மத்தேயு 25 : 40ம் வசனத்தில் உலகத்தையும், மனிதர்களையும் படைத்த தேவாதி தேவன் இயேசு கூறுகிறார். ஏழைகளுக்கும், தேவையுள்ளோருக்கும் நாம் செய்யும் உதவிகளை, இயேசுவே பெற்றுக் கொள்வதாக கூறுகிறார். உலகில் வாழும் போது நம்மால் இயன்ற உணவு. பணஉதவி மற்றும் நல்ல ஆலோசனைகளை கொடுத்து மக்களை நாம் சந்தோஷப்படுத்துவது, தேவன் இயேசுவை சந்தோப்படுத்துவதாகும்.

## விசேஷித்த கரிசனை

ஏழைகள், திக்கற்றோர் மேல் நம் இறைவன் இயேசு, விசேஷித்த கரிசனை அதாவது அக்கறை கொண்டவர். ஒரு ஆண்டுக்கு முன்பு எனக்கு காய்ச்சல் ஏற்பட்டதின் காரணமாக ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நிலை. அங்கு நான் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்தில் ஒரு பயிற்சி நர்ஸ் என்னிடம் வந்தாள். அவள் கண்களில் கண்ணீர். அவள் சொன்னாள், ராபின் அங்கிள் ஃபோன் நம்பர் கிடைத்தது, தொடர்ந்து 2முறை அவரோடு செல்போனில் தொடர்பு கொள்ள முயற்சித்தும் தொடர்பு கிடைக்கவில்லை. இயேசு தான் உங்களை இங்கு சந்திக்க வைத்திருக்கிறார். இங்குள்ள சாப்பாட்டு மெஸ்ஸில் மூன்று மாதங்களாக பணம் கட்ட முடியாததால், நான் சாப்பிட சென்றால், என்னிடம் பணம் கேட்டு திட்டுகிறார்கள். எனக்கு மெஸ் ஃபீஸ் கட்டுவீர்களா? என்று கேட்டாள்.

## உதவி செய்தோம்

என் கணவருக்கு, அவளுடைய தொலைபேசிக்கு தொடர்பு கொள்ள முடியாத, பல வேலைகள் இருந்ததால், அவளுடைய பணத் தேவையை அவரால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் இயேசு எனக்கு காய்ச்சலைக் கொடுத்தார். அதே மருத்துவமனைக்கு எங்களை அழைத்து வந்து, திக்கற்ற நிலையில் இருந்த அந்த பயிற்சி நர்சை சந்திக்க வைத்தார். எனக்கு டிரிப்ஸ் போட்டு விட்டு, அன்று மாலையே வீடு திரும்பினோம். அவள் கேட்ட உடனேயே என் கணவர் அவளுடைய 3மாத மெஸ் பீஸை, அங்குள்ள மெஸ்ஸில் கட்டினார். எனக்கும் அன்று இரவே காய்ச்சல் குணமானது. இதுதான் இயேசுவின் ஆச்சரியமான, நம் அறிவுக்கு எட்டாத அன்பு, தொடர்ந்து அந்த பெண்ணுக்கு நாங்கள் பணஉதவி செய்ய ஆண்டவர் இயேசு கிருபை செய்து வருகிறார்.

ஏழைகளின் கண்ணீரை விலையுயர்ந்த முத்துக்களாக எண்ணி, அதை கணக்கில் வைத்து உடனே, அவர்களுக்கு உதவியை கட்டளையிடுபவர், நம் இறைவன் இயேசு.

- தொடரும்.






# வேத வினாப் போட்டி

(அனைவரும் கலந்து கொள்ளலாம்) ஆதியாகமம் 23-24

"உன் பிரயாணத்தை வாய்க்கப் பண்ணுவார்?"

- சொன்னவர் யார்?

**சென்ற மாத சரியான விடை**

1 சாமுவேல் 6:20 பெத்ஷிமேசின் மனுஷர்



ஆக்னஸ் லாரன்ஸ்

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 20.09.2013

# இயேசுவின் சமாதானம் பெறுங்கள்

இயேசுவின் சமாதானம் மூலம் வெளியிடப்பட்ட
உடைந்த உள்ளங்களுக்கு
**பரவசப் பாடல்கள் - பாகம் - 1 ACD**
வேண்டுவோர் ரூ. 50/-ம்







இயேசுவின் சமாதானம் **பரவச நேரம்**
ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின்
கொடுத்த 4தேவ செய்திகள் அடங்கிய
DVD பெற விரும்பினால் ரூ. 50/-ம்

பொற்செல்வி ராபின் எழுதிய
பரலோக, நரக தரிசனங்கள் அடங்கிய
**நித்திய வாழ்வின் ரகசியங்கள்**
புத்தகம் பெற விரும்புவோர்
ரூ. 30/-ஐ அனுப்பி, தபாலில்
பெற்றுக் கொள்ளுங்கள்.



எங்கள் முகவரி
**இயேசுவின் சமாதானம்**
393, பேஸ் 2,
ஹவுசிங் யூனிட், சிட்கோ,
கோயம்புத்தூர் - 641 021,
தென் இந்தியா



Our Address
**PEACE OF JESUS**
393. Phase 2,
Housing Unit, SIDCO,
Coimbatore - 641 021.
S.India

ஜெப உதவி / தொடர்புக்கு : (+91) 9994510610
Email: asvrobin@gmail.com www.peaceofjesus.org

# இயேசுவின் ரகசிய வருகை



- தொடர் 95

– பொற்செல்வி ராபின்

## பரலோகத்தில் வாழ

ஆட்டுக்குட்டியானவரின் (தேவன் இயேசுவின்) ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள் என்று பைபிளில் உள்ள வெளி 21:27ல் வாசிக்கிறோம். என்றென்றும், அதாவது கோடிக்கணக்கான ஆண்டுகள் முடிவே இல்லாத நிரந்தர வாழ்வை, நாம் தேவன் இயேசுவோடு பரலோகத்தில் வாழ, நாம் இயேசுவால் பரலோகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இதற்காக தேவன் இயேசுவிடம் உள்ள ஜீவ புஸ்தகம் என்ற புத்தகத்தில், நம்முடைய பெயரை அவர் எழுதியிருக்க வேண்டும். ஜீவ புஸ்தகத்தில் நம் பெயர் எழுதப்படாவிட்டால், நாம் பரலோகம் செல்ல முடியாது.

## நிரந்தரமான ஆத்துமா

உடல் அழியும், ஆத்துமா நிரந்தரமானது. தீட்டுள்ளதும், அருவருப்பையும், பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் (ஒரு ஆத்துமாவும்) அதில் பிரவேசிப்பதில்லை என்று வெளி 21:27ம் வசனத்தில் தேவன் நம்மை எச்சரிக்கிறார். சிறுபிள்ளைகளிடம் காணப்படும் பாவம் இல்லாத பரிசுத்தம், அன்பு நம்மிடமும் காணப்பட வேண்டும் என்று தேவாதி தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். நம்மை தீட்டுப்படுத்தி நம்மை பரிசுத்த தேவனிடமிருந்து பிரிக்கக் கூடிய காரியம் நம்மிடம் இருக்கிறதா என்று நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். நம் உடல் செய்யும் பாவங்கள், சிந்தனையில் வரும் பாவங்கள் தான் நமக்குள் இருக்கும் ஆத்துமாவை கெடுக்கும்.

## நியாயத் தீர்ப்பு நாள்

தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிச்சயிக்கப்படுவது என்பது வேறு. நியாயத்தீர்ப்பு நாள் என்பது வேறு. ஒரு மனிதன் உலகில் வாழும் நாளெல்லாம் செய்யும் நல்ல செயல்கள் அல்லது தீய செயல்களுக்கு தக்க நியாயத்தீர்ப்பு தேவனால் நிச்சயிக்கப்பட்டு, மரணம் நிகழ்கிறது. மரணம் நிகழ்ந்ததும். கண் இமைக்கும் நேரத்தில் மனிதனுக்குள் இருந்த ஆத்துமா நன்மை செய்திருந்தால் தேவனால் பரலோகத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்படும். தீமை செய்திருந்தால் தண்டனையை அனுபவிக்கும்படியாக தேவனால் நரகத்தில் தள்ளப்படுகிறது. நரகம் என்பது தற்காலிக சிறை. நியாயத் தீர்ப்பு நாளில், வெள்ளைச் சிம்மாசனத்தில் தேவன் அமர்ந்து, நரகத்தில் உள்ளவர்களை, கந்தகம் நிறைந்த அணையாத தீ எரியும் அக்கினிக் கடலில் போடுவார்.

அப்பொழுது மரணமும், பாதாளமும் (நரகமும்) அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டது. ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவனாக காணப்படாதவன் எவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான். (வெளி 20 : 14, 15) உலகத்தை அழித்த பின்பு தேவன் செய்யப்போகும் காரியம் இது.



– தொடரும்.

JB HOMES

# Build your Home !....
# Like your Dreams !...

# ஜே.பி. ஹோம்ஸ்-ன் முதல் படைப்பு

ஒத்தக்கால் மண்டபம், கோயமுத்தூர்.

JENIFER NAGAR

100 VILLAS

DTP

## அப்ரூவ்டு வீட்டுமனைகள்

1. வங்கி கடன் 80% ஏற்பாடு செய்து தரப்படும்.
2. மனையிடங்களை பார்வையிட வாகன வசதி உள்ளது.
3. கோவை – பொள்ளாச்சி மெயின் ரோடு
4. மனையை சுற்றிலும் பாதுகாப்பு 24 மணி நேரமும்
5. சோலார் மின் விளக்குகள்
6. பைபாஸ் – 9 கி.மீ.
7. கற்பகம் மருத்துவக்கல்லூரி மிக அருகில்




BOOKINGS OPEN NOW

DON'T MISS IT

0422 2493370

தொடர்பு முகவரி :

**JB HOMES AND PROPERTY DEVELOPERS PVT LTD.**

No. 146, Ground Floor, 8th Street, Gandhipuram, coimbatore - 641 012.
Email id : jbpropertydeveloperspvtltd@gmail.com


JB HOMES
ஜே.பி. ஹோம்ஸ்-ன் 2வது படைப்பு
மேட்டுப்பாளையம் மெயின் ரோடு அருகில்,கோயமுத்தூர்
DTP
அப்ருவ்டு வீட்டுமனைகள்
JENIFER NAGAR
மெயின் ரோட்டிலிருந்து 2 கி.மீ. ஒன்னிப்பாளையம்
கிராமம் மெயின் ரோட்டில் பிளிச்சி ஊராட்சிக்கு உட்பட்டது.
BOOKINGS OPEN
NOW
DON'T MISS IT
0422 2493370
60
VILLAS


BETHEL HOSPITAL
மகப்பேறு மருத்துவம்
எலும்பு முறிவு சிகிச்சை
நுண்துளை அறுவை சிகிச்சை
(Laparoscopy, Arthoscopy, Key Hole Surgery)
மூட்டு மாற்று அறுவை சிகிச்சை
தண்டுவட அறுவை சிகிச்சை,
பொது அறுவை சிகிச்சை,
செவிலியர் பயிற்சி படிப்பு
பெத்தேல் மருத்துவமனை
223. டாக்டர் ராஜேந்திர பிரசாத் சாலை, கோயமுத்தூர் - 641 012.
தொலைபேசி : +91 422 2498884. 3245300 Fax : +914222496147
Email : bethelhospital2006@yahoo.co.in
Dr. S. ராஜபாண்டியன் MS (Ortho) D. Ortho.,
Dr. ஷீலா ராஜபாண்டியன் MD. DGO.,

# SELVASINGH SPORTS & MUSICALS

YONEX, BDM, SS, SG, MASPRO, NIVYA, COSCO, VICKY, YONKAR, CRICKET BAT, FOOT BALL, VOLLEY BALL, ROLLENSKATE, SPORTS SHOE, SPORTS CUPS, SWIM WEAR.




## சிறப்பு தள்ளுபடி விற்பனை 2013

PREETHI, PRESTIGE, PREMIER, PHILIPS, PIGEON, SONY, BUTTERFLY, BAJAJ, ULTRA, MILTON

### PREETHI MIXIE

Rs.1500 வரை எக்ஸ்சேஞ்ச் தள்ளுபடி

### PRESTIGE INDUCTION

Free + 

### PIGEON INDUCTION

Crystall 2013 Special Offer

+ +

Rs. 2195 மட்டுமே

### EMERGENCY LAMP

BPL
PIGEON
ROLLS
ONIX
BAJAJ
RECHARGEABLE FAN

### PREMIER

எக்ஸ்சேஞ்ச் ரூ. 1400/- வரை தள்ளுபடி

### PRESTIGE GAS STOVE

30% எக்ஸ்சேஞ்ச் தள்ளுபடி

### MILTON

15% வரை தள்ளுபடி

### BAJAJ IRON BOX

~~MRP 649~~
Rs. 395

~~MRP 600~~
Rs. 475
Only

### PHONE

Beetel, Panasonic

கம்பெனி விலையைவிட குறைவாக

## SELVASINGH STORES

Opp Lakshmi Complex, Crosscut Road, Coimbatore - 12. Ph : 2493987



ஏழைகளின் நலனில்

**இயேசுவின் சமாதானம்**

பசியோடு வீடு தேடிவரும்
ஏழை பிள்ளைகளுக்கு
பிஸ்கெட் மற்றும்
பண உதவியை
இயேசுவின் கிருபையினால்
ரோஸலின் தாயம்மாள்
செய்த போது

# இயேசுவின் சமாதானம் ஊழியம் மூலம் வெளிதேச ஊழியம் தந்த இயேசு



நான் கோவை மதுக்கரையில் உள்ள ஓ.பி.சி. ஆலயத்தில் போதகராக இருக்கிறேன். 2 வருடங்களுக்கு முன் வெளியூர் செல்ல தேவையான ஒரு பெரிய பேக் வாங்க மிலிட்டரி கேம்புக்கு சென்றேன். ஆனால் என்னை அறியாமல் வெளிநாடு கொண்டு செல்லும் சக்கரமுள்ள டிராலி பேக்கை வாங்கிவிட்டேன். இது தேவ திட்டம் ஆகவே, வெளிநாட்டுக்கு தேவன் ஊழியத்திற்கு அழைத்து செல்லும் வரை இதை பயன்படுத்தக் கூடாது என்று மனைவியிடம் கூறினேன். இதற்காக ஜெபித்தும் வந்தோம். கர்த்தர் என்னிடம் வெளிதேச ஊழியத்திற்கு ஒரு சகோதரன் மூலம் உனக்கு உதவி செய்வேன் என்று என்னோடு பேசினார். அப்போது சகோதரர் ஏ.எஸ்.வி. ராபின் அவர்களை சந்தித்து இதைப் பற்றி சென்னேன். உடனே அவர்கள் ஆண்டவர் இயேசு உங்களுக்கு உதவி செய்வார் என்று சொல்லி இலங்கை தேச ஊழியத்தை ஏற்பாடு செய்தார். பின்பு, சகோ. டோனால்டு ஆபிரகாம் (இயேசுவின் அற்புத ஊழியம்) அவர்களிடம் ஜெபிக்க சொன்னேன். அவரும், ஜெபித்து வெளிதேச ஊழியம் இருப்பதை உறுதிப்படுத்தினார். தேவன் இயேசுவின் திட்டத்தின்படி ஜுலை 31 முதல் ஆகஸ்ட் 13 வரை இலங்கை தேசத்தில் பாஸ்டர். சந்திரசேகர் (திரிகோணமலை), பாஸ்டர். ராஜசிங்கம் (வவுனியா) ஆகியோரின் தலைமை மற்றும் கிளை சபைகளில் கர்த்தர் என்னை வல்லமையாய் பயன்படுத்தினார். முதல் முதலாக என்னை சகோ. ஏ.எஸ்.வி. ராபின் மூலம் வெளிதேச ஊழியத்திற்கு, அழைத்து சென்ற தேவாதி தேவன் இயேசுவை மகிமைப்படுத்துகிறேன்.



பாஸ்டர். **ஆர். டேனியல்**
கோவை.

YouTube ஏ.எஸ்.வி. ராபின் - பொற்செல்வி ராபின் கொடுத்த தேவ செய்திகளைக் கண்டு
தேவன் இயேசு தரும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்
keyword : ASV Robin, Rajlynt Robin, Porchelvi Robin



Registered with Registrar of News Paper for India
RNI / TNTAM / 14783 / 2002

Postal Regsitration No. CB / 001 / 2012 - 2014
தனிப்பிரதி ரூ. 4/- ஆண்டு சந்தா - ரூ. 40/-



# இயேசுவின் சமாதானம்
## லண்டன் மற்றும் கனடா ஊழியங்கள்



**2014ம் ஆண்டின் வெளிதேச ஊழியங்களுக்காக ஜெபித்து கொள்ளுங்கள்.**

## இயேசுவின் சமாதானம்

### மலைப்பகுதி ஊழியம்





இயேசுவை அறிந்த மற்றும் அறியாதவர்களுக்கு, நித்திய வாழ்வின் ரகசியங்கள்
புத்தகத்தை பொற்செல்வி ராபின் கொடுத்த போது
(இடம் : பிள்ளையார்புரம், சிட்கோ, கோயமுத்தூர்.)

## இயேசுவின் சமாதானம்

### வளர்ச்சியில் பிற ஊழியங்கள்



இயேசுவின் சமாதானம்
ஊழியத்தை
நேசிக்கும் அன்பு சகோதரி
நளினி செல்வராஜ் அவர்கள்
(கடைசிகால எழுப்புதல்
ஊழியங்கள்)
ஏ.எஸ்.வி. ராபின் இல்லத்திற்கு
வந்த போது. (உடன்
ராஜ்லின்ட் ராபின்,
ஏ.எஸ்.வி. ராபின்,
பொற்செல்வி ராபின் &
ரோஸலின் தாயம்மாள்)

Owned & Published By A.S.V. ROBIN Managing Trustee on behalf of Peace of Jesus Ministry & Trust 393, Phase - 2, Housing Unit, Sidco, Coimbatore - 641 021. and Printed at Vimal Offset Printing, Coimbatore - 641 012. India Editor : A.S.V. ROBIN